மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

முன்னிலை திரு.சி.ராஜேஷ்., பி.ஏ.,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி

2019ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.124/2015

1.தம்மா நாயக்கர்( இறந்துவிட்டார்) ,

2.தொப்பாயி அம்மாள்,

3.மல்லமநாயக்கர்,

4.பழனிசாமி,

5.கோபாலகிருஷ்ணன்,

6.பெருமாள்,

7.பொம்முராஜ்,

8.கலாராணி ....வாதிகள்

//எதிர்//

1.பொம்மக்காள்,

2.நாகம்மாள்,

3.பெருமாள் நாயக்கர்,

4.பரமசிவம்,

5.மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் மாவட்டம்.

6.வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.

7.வட்டாட்சியர், கடவூர் வட்டம், கரூர் மாவட்டம். ....பிரதிவாதிகள்

இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலில் போடப்பட்டு இன்று 28.11.2019ம் நாளன்று 1 முதல் 8 வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், வாதிகளை இன்று நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத தவறுகையால் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்புரை

தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்தும், அதன் தொடர் பரிகாரமாக தாவா சொத்துக்களை வாதி அனுபவிப்பதை 1 முதல் 4 பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ ஏஜெண்டுகளோ எவ்வித இடைஞ்சலும் செய்யாமலிருக்க ஒரு நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா சொத்துக்களை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள 2135, 2879 மற்றும் 2203 ஆகிய எண்ணுள்ள பட்டாக்களை 5 முதல் 7 பிரதிவாதிகள் ரத்து செய்து வாதி பெயருக்கு பட்டா வழங்குவதற்கும் ஒரு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகைக்கும் வாதிகளால் இவ்வழக்கு உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 7 விதி 1ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது விசாரணைக்காக பட்டியலில் போடப்பட்டிருந்த நிலையில் வாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் அவர்கள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாத நிலையில் வாதிகளின் வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

2019ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28ம் நாளன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

ஒம்/சி.ராஜேஷ்

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

குளித்தலை.